## அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சத்தியமங்கலம் - 638 401.

## நான் முதல்வன் திட்டம் - முதற்கூட்டத்தின் நிகழ்வுகள்

## 22.11.2022

- சத்தியமங்கலம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ‘‘நான் முதல்வன்’’ திட்டத்தின் சார்பாக முதற்கூட்டம், கல்லூரிக் கலையரங்கில் 22.11.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.
- கற்றலின் மேம்பாட்டிற்காகவும், மாணாக்கர்கள் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகளின் பயன்பாட்டிற்காகவும் இக்கூட்டம் நடத்தப்பெற்றது.
- ‘‘நான் முதல்வன்’’ திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் வேதியியல் துறைத்தலைவர் முனைவர்.N. சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.
- கல்லூரியின் முதல்வர் முனைவர்..K. ராதாகிருஷ்ணன் அவர்கள் கூட்டத்திற்கு முன்னிலை வகித்து, எதிர்கால இளைய தலைமுறையினருக்கு கல்வியின் அவசியத்தையும், வேலைவாய்ப்பிற்கான களங்களையும் எடுத்துக்கூறி சிறப்புரையாற்றினார்.
- வணிகவியல் துறையைச் சார்ந்த பேராசிரியர். J.J. ஷாலினி அவர்கள், ‘‘நான் முதல்வன்’’ திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பயிற்சி வகுப்புகள், பயிற்சி வகுப்புகளின் அவசியம், கல்லூரிப் பாடத்திட்டத்தோடு ஒருங்கிணைந்த பயிற்சிகள் குறித்தும் உரையாற்றினார்.
- பொருளியல் துறையைச் சார்ந்த பேராசிரியர். S. சத்தியபிரியா அவர்கள் நான் முதல்வன் திட்டத்தின் வலைதள பக்கத்தைப் பயன்படுத்துதல், வலைதளத்தில் இடம்பெற்றுள்ள சலுகைகள், வலைதளத்தைப் பயன்படுத்துவதால் அடையக்கூடிய பயன்கள் போன்றவற்றை எடுத்துரைத்தார்.
- ஆங்கிலத்துறைப் பேராசிரியர். J. மணிகண்டன் அவர்கள் தன்விபரப் பட்டியலைத் தயார் செய்தல், அதற்கான மேற்கோள் நெறிமுறைகள், தனிமனித மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் போன்றவற்றை எடுத்துக்கூறினார்.
- காட்சித்தொடர்பியல் துறைப் பேராசிரியர் முனைவர். K. ஜெயராஜ் அவர்கள் பொதிந்து கிடக்கும் வேலைவாய்ப்புகள், சுயதொழில் நெறிமுறைகள், கற்றலோடு இணைந்த பயிற்சிகளைப் பெறுதல் போன்ற கருத்துகளை எடுத்துரைத்தார்.
- இளங்கலை பயிலும் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.
- கூட்டத்திற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் குழு உறுப்பினர்கள் சிறப்பான முறையில் செய்திருந்தனர்.
- தமிழ்த்துறைப் பேராசிரியர். முனைவர்.C.வான்மதி நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.